**ஜூலை – 14**

# TNPSC துளிகள்

- 2019 ஆம் ஆண்டின் குடியரசு தின கொண்டாட்டத்திற்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்பை முதன்மை விருந்தினராக பங்கேற்க மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. இந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டால் பராக் ஒபாமாவிற்குப் பிறகு குடியரசு தின அணிவகுப்பிற்கு முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்ட இரண்டாது அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் இருப்பார்.


# தேசியச் செய்திகள்

## இறக்குமதியை குறைக்க நிபுணர்குழு நியமனம்

- இறக்குமதி மீதான சார்பை குறைப்பதற்காக கொள்கை முடிவுகளையும் பலதரப்பட்ட இதர விஷயங்களையும் அடையாளம் கண்டிட அமைச்சரவைச் செயலாளர் P.K. சின்கா தலைமையில் உயர் நிபுணர்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.
- நாட்டிற்குள்ளே தயாரிக்கப்படக் கூடிய பொருட்களை அடையாளம் கண்டு அவற்றின் இறக்குமதியை குறைத்திட இக்குழு பல வழிகளை பரிந்துரைக்கும்.
- இந்த நிபுணர் குழு, வர்த்தகத் துறை, தொழிற் கொள்கை மற்றும் மேம்பாடு, வருவாய், திறன் மேம்பாடு, ராணுவ உற்பத்தி, பெட்ரோலியம், எஃகு, மின்னணு மற்றும் தொலைத் தொடர்பு ஆகிய துறைகளின் செயலாளர்களை உள்ளடக்கியதாக இருக்கும்.
- சராசரியாக, இந்திய இறக்குமதியின் மதிப்பு வருடத்திற்கு ஏறக்குறைய 450 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.
- 2019-18 நிதியாண்டில் 460 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை 20 சதவிகித அளவிற்கு இறக்குமதியின் மதிப்பு அதிகரித்திருக்கின்றது.


## ஸ்வச் சர்வேக்ஷன் கிராமின் 2018

- மத்திய குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை அமைச்சகம், புது தில்லியில் 2018 ம் ஆண்டின் ஸ்வச் சர்வேக்ஷன் கிராமீன் என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- சுவச் பாரத் கிராமீன் என்ற திட்டத்தின் முக்கிய அளவுகள் மற்றும் தகுதிகள் ஆகியவற்றின் அளவுருக்களை அடைந்ததின் செயல்திறன் அடிப்படையில் மாநிலங்களை மாவட்டங்களையும் தரவரிசைப்படுத்துவதே இந்த அறிக்கையின் நோக்கமாகும்.
- இந்த அறிக்கையின் அடிப்படை விதிகள் பொது இடங்களின் ஆய்வு, சுத்தத்தைப் பற்றிய குடிமக்களின் பார்வை, அவர்களின் பரிந்துரைகள் மற்றும் சுவச் பாரத் கிராமீன் திட்டத்தின் தரவுகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
- இந்த அறிக்கைக்கான கணக்கெடுப்பு 2018ம் ஆண்டு ஆகஸ்டு 1 முதல் 31 வரை அனைத்து மாவட்டங்களிலும் தனிச் சுதந்திரமுடைய ஆய்வு நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும்.




## கே.கஸ்தூரி ரங்கன் குழு

- புதிய கல்விக் கொள்கைக்கான வரைவு அறிக்கையை தயாரிக்க கே.கஸ்தூரிரங்கன் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் பணிக்காலத்தை மூன்றாவது முறையாக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் நீட்டித்துள்ளது.
- இக்குழு தனது பணிக்கால நீட்டிப்புக்கு முன்னால் ஜூன் 30ஆம் தேதி அன்று தனது அறிக்கையை சமர்ப்பித்திருக்க வேண்டும். பணிக்கால நீட்டிப்புக்குப் பின்னால் ஆகஸ்ட் 31ஆம் தேதி இக்குழு அறிக்கையை சமர்ப்பிக்கும்.
- தற்பொழுதுள்ள தேசியக் கல்விக் கொள்கையானது 1986ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இக்கொள்கை 1992ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது.
- கஸ்தூரி ரங்கனைத் தவிர, கணிதவியலாளர் மஞ்சுள் பார்கவா உள்பட 8 உறுப்பினர்கள் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.
- ஸ்மிருதி இராணி மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த போது முன்னாள் அமைச்சரவைச் செயலாளர் டிஎஸ்ஆர் சுப்பிரமணியன் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. கஸ்தூரி ரங்கன் தலைமையிலான குழு டிஎஸ்ஆர் சுப்பிரமணியன் குழுவின் அறிக்கையையும் ஆராய்ந்து வரைவு அறிக்கையை சமர்ப்பிக்கும்.




### மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிக்கை

- மத்திய உள்துறை அமைச்சகத்தின் 2017-2018ஆம் ஆண்டு அறிக்கையின்படி 2016ஆம் ஆண்டில் 54,723 குழந்தைகள் கடத்தப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இது தொடர்பாக 40.4 சதவீதம் மட்டுமே வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.
- 2015ஆம் ஆண்டில் 41,893 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2014ஆம் ஆண்டில் 37,854 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிக்கையில், நாட்டில் 2016ஆம் ஆண்டில் 8,132 ஆள்கடத்தல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- 2016ஆம் ஆண்டில் குழந்தைக் கடத்தல் வழக்குகளில் 22.7 சதவீதம் தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டிற்கான விபரம் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிக்கையின்படி 2016ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்காக 1,06,958 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- 2015ஆம் ஆண்டில் 94,172 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு 13.6 சதவீதம் குற்றங்கள் அதிகரித்திருப்பது தெளிவாகிறது.

## சர்வதேசச் செய்திகள்

### இணைய பாதுகாப்பு ஆபத்துகளை சமாளிக்க டிஜிட்டல் ஒத்துழைப்பின் மீதான குழு

- ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் அன்டோனியா குட்டரஸ் இணைய பாதுகாப்பு ஆபத்துகளிலிருந்தும், வெறுப்புப் பிரச்சாரங்களிலிருந்தும் வரும் விஷயங்களை சரி செய்திட முதல் முறையாக டிஜிட்டல் ஒத்துழைப்பின் மீதான குழு ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்.
- டிஜிட்டல் ஒத்துழைப்பின் மீதான உயர்மட்டக் குழு அமெரிக்க கொடையாளி

மெலின்டா கேட்ஸ் மற்றும் சீனாவைச் சார்ந்த அலிபாபாவின் நிறுவனர் ஜாக் மா ஆகியோரால் இணைந்து தலைமை தாங்கப்படும்.

- இந்த குழு மொத்தத்தில் 20 உறுப்பினர்களை கொண்டதாகவும், தொழில்நுட்பம், பொதுக் கொள்கை, அறிவியல் மற்றும் கல்வித் துறை ஆகிய துறைகளின் தலைவர்களையும் கொண்டதாக இருக்கும்.
- இந்தக் குழுவின் செயல் அலுவலகத்தில் நிர்வாக இயக்குநர்களாக முன்னாள் இந்திய ராஜதந்திரியான ஜோவன் குர்பலிஜாவுடன் சேர்த்து மூத்த இந்திய ராஜதந்திரியான அமன்தீப் சிங் கில் ஆகிய இருவரும் பதவி வகிப்பர்.

## பிரிக்ஸ் கல்வி அமைச்சர்களின் சந்திப்பு-2018

- பிரிக்ஸ் கல்வி அமைச்சர்களின் சந்திப்பின் 6வது பதிப்பு தென் ஆப்பிரிக்காவிலுள்ள கேப் டவுனில் நடைபெற்றது.
- இந்த சந்திப்பு உயர்கல்வி மற்றும் பயிற்சித் துறையினால் தொகுத்து வழங்கப்பட்டது.
- இந்த வருட சந்திப்பிற்கான கருத்துரு, "பிரிக்ஸ் கல்வி கூட்டாண்மை மற்றும் பரிமாற்றத்தினை ஆழமாக்குதல்".
- இந்த சந்திப்பில் இந்தியாவிற்காக ஒதுக்கப்பட்ட முக்கிய கருத்துரு, "கல்வித்துறையை டிஜிட்டல் மயமாக்கல்" என்பது ஆகும்.

## UAE - கட்டாய இராணுவ சேவை

- ஐக்கிய அரபு அமீரகம், அமீரக ஆண்களுக்கான கட்டாய இராணுவ சேவையினை 12 மாதங்களிலிருந்து 16 மாதங்களாக நீட்டித்துள்ளது.
- உயர்கல்வி டிப்ளமோ (அ) அதற்கு சமமான தகுதி உடைய ஆண்கள் 12 மாதங்களுக்குப் பதிலாக 16 மாதங்கள் பணி ஆற்றலாம்.
- அதே நேரத்தில் உயர்கல்வி தகுதியில்லாதவர்கள் அவர்களது பணியினை தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு செய்யலாம்.
- இது பெண்களுக்கான பங்களிப்பிற்கும் வாய்ப்பளித்துள்ளது. இதற்காக அவர்களின் விருப்பத்துடன் அவர்களின் சட்டரீதியான பாதுகாப்பாளரிடமிருந்து ஒப்புதலையும் பெற்றிருக்க வேண்டும். பெண்கள் 9 மாதங்களுக்கு மட்டுமே பணியாற்ற முடியும்.
- அமீரக ஆண்களுக்கான கட்டாய இராணுவ சேவையினை UAE 2014-ல் தொடங்கியது.
- சர்வதேச அளவில் வெளிநாட்டில் உள்ள ஏமன் அரசை மீண்டும் பதவியில் அமர்த்த ஈரானுடன் கூட்டுசேர்ந்த ஹவுதி இயக்கத்திற்கு எதிராக 2015-ல் ஏமனில் தலையிட்ட சவுதியின் தலைமையிலான இராணுவக் கூட்டணியின் முக்கிய உறுப்பினர் UAE ஆகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## குறைந்தபட்ச ஆதார விலையில் உயர்வு

- 14 கரீப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையினை (Minimum Support Price – MSP) 4 லிருந்து 53 சதவிகிதம் வரை உயர்த்துவதற்கு மத்திய அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.
- உள்ளீட்டு விலையினைக் கணிக்க A2 + FL என்ற மதிப்பு கருதப்படுகிறது. அதாவது உண்மை விலை மற்றும் பயிரை உற்பத்தி செய்வதில் ஈடுபடும் குடும்பத் தொழிலாளர்களின் கணிக்கப்பட்ட மதிப்பின் கூடுதலாகும்.
- மொத்தமாக 26 பயிர்கள் MSP-ன் கீழ் வந்துள்ளன. (கரும்பிற்கு நியாயமான லாபகரமான விலை)
- இதில், கொப்பரைத் தேங்காய், உமி நீக்கப்பட்ட தேங்காய், பருத்தி, சணல், கரும்பு மற்றும் விர்ஜினியா ப்ளூ குணப்படுத்தப்பட்ட புகையிலை ஆகியன அடங்கும்.

| 7 தானியங்கள் | 5 பருப்பு வகைகள் | 8 எண்ணெய் வித்துக்கள் |
|---|---|---|
| நெல் | கொள்ளு | கடலை |
| சோளம் | துவரை | கடுகு |
| கோதுமை | பாசிப்பயறு | டோரியா |
| பார்லி | உளுந்து | சூரியகாந்திப்பூ விதை |
| கம்பு | அவரை | செந்தூரகப்பூ விதை மற்றும் காட்டு எள்ளு |
| கேழ்வரகு | | எள் |
| மக்காச் சோளம் | | சோயா பீன் |


- பணவீக்க அழுத்தங்களை கூட்டுவதோடு 0.1 – 0.2 சதவிகித என்ற அளவில் GDP-ல் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கரீப் பயிர்களின் MSP-உயர்வுக்கான அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.
- பொருளாதார வல்லுநர்கள் FY19-ல் (Financial year 2019) உணவு வீக்கம் 50-90 புள்ளிகள் வரை உயரும் என்று எதிர்பார்க்கின்றனர்.

| Crop (per quintal) | Last year's MSP | Approved MSP | change |
|---|---|---|---|
| Ragi | 1900 | 2897 | 52.5% |
| Nigerseed | 4050 | 5877 | 45.1% |
| Jowar (hybrid) | 1700 | 2430 | 42.9% |
| Jowar (malandi) | 1725 | 2450 | 42.0% |
| Bajra | 1425 | 1950 | 36.8% |
| Sunflower seed | 4100 | 5388 | 31.4% |
| Cotton (medium) | 4020 | 5150 | 28.1% |
| Cotton (long) | 4320 | 5450 | 26.2% |
| Moong | 5575 | 6975 | 25.1% |
| Maize | 1425 | 1700 | 19.3% |
| Sesamum | 5300 | 6249 | 17.9% |
| Paddy (common) | 1550 | 1750 | 12.9% |
| Paddy (grade A) | 1590 | 1770 | 11.3% |
| Soyabean | 3050 | 3399 | 11.4% |
| Groundnut | 4450 | 4890 | 9.9% |
| Tur (arhar) | 5450 | 5675 | 4.1% |
| Urad | 5400 | 5600 | 3.7% |

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## மனித உடல் மீதான உலகின் முதல் முப்பரிமாண வண்ண X - கதிர்வீச்சு

- நியூசிலாந்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள் உலகின் முதல் முப்பரிமாண X-கதிர் வீச்சினை மனித உடல் மீது செயல்படுத்தியுள்ளனர். இது மருத்துவத்துறையில் நோய்க் கண்டறிதலை மேம்படுத்தும் திறனைக் கொண்டுள்ளது.
- இந்த புதிய சாதனம் பாரம்பரிய கருப்பு மற்றும் வெள்ளை X-கதிர் வீச்சினை அடிப்படையாகக் கொண்டது.
- ஆனால் இது மெடிப்பிக்ஸ் என்று அழைக்கப்படும் அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பினால் (European Organisation for Nuclear Research) உருவாக்கப்பட்ட துகள்களை கண்காணிக்கும் (particles detecting) தொழில் நுட்பத்தினைக் கொண்டுள்ளது.
- மெடிப்பிக்ஸ் (medipix) அதன் திரை திறந்திருக்கும் போது பிக்சல்களுடன் மோதும் தனிப்பட்ட துணை – அணுத் துகள்களை கண்டறியும் மற்றும் எண்ணும் புகைப்படக் கருவி போல் செயலாற்றும்.
- இது பெரும் ஒப்புப் படித்திறன் மற்றும் உயர் பிரிதிறன் கொண்ட புகைப்படங்களுக்கு இசைகிறது.
- இந்த தொழில்நுட்பமானது நியூசிலாந்தின் MARS உயிரியப் புகைப்பட நிறுவனத்தினால் வணிக ரீதியாக்கப்பட்டது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## நீலகிரி வரையாடு - அச்சுறுத்தும் பருவநிலை மாற்றம்

- சமீபத்தில சர்வதேச பத்திரிக்கையான எகாலஜிக்கல் என்ஜினியரிங் (Ecological Engineering) வெளியிட்ட ஆய்வின் படி நீலகிரி வரையாட்டை அச்சுறுத்திக் கொண்டிருப்பது பருவநிலை மாற்றமாகும்.
- 2030ஆம் ஆண்டு முதல், அருகிவரும் இந்த வரையாடு தனது வசிப்பிடத்தில் தோராயமாக 60 சதவிகிதத்தை இழந்திருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- வனப்பகுதிகளில் மொத்தம் 2500 என்ற அளவில் மட்டுமே நீலகிரி வரையாடுகள் இருப்பதாகவும் அவற்றின் மக்கள்தொகை சிறியதாகவும் தனித்து விடப்பட்டுள்ளதாகவும் இருக்கின்றன. இச்சூழ்நிலை அவற்றுக்கு உள்ளூரில் அழிவை ஏற்படுத்தி பாதிப்புக்குள்ளாக்கும்.
- இது தமிழ்நாட்டின் மாநில விலங்காகும். நீலகிரி முதல் கன்னியாகுமரி வரையில் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டுமே காணப்படும் விலங்கு இதுவாகும்.
- மேற்கு தொடர்ச்சி மலைகளில் சோழா காடுகளின் உயர்ந்த பகுதிகளில் குறுகிய பகுதிகளில் இதன் வாழ்விடம் சுருக்கப்பட்டுள்ளது.
- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (Internation Union for Conservation of Nature - IUCN) தனது சிவப்பு தகவல் புத்தகத்தில் (Red Data Book) இவ்விலங்கை அருகிவரும் இனமாக (2500 என்ற எண்ணிக்கைக்கும் குறைவான முதிர்ச்சியுடைய விலங்குகள்) பட்டியலிட்டுள்ளது.
- தவிர, 1972ஆம் ஆண்டு வனவுயிர் பாதுகாப்புச் சட்டத்தின் முதல் பட்டியலில் பாதுகாக்கப்பட்ட உயிரினங்களாக இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## குறைந்த செயல்திறனுடைய 50 வயதுக்கு மேற்பட்ட பணியாளர்களுக்கு கட்டாய ஓய்வு

- தங்கள் வேலையை சரியாக செய்யாமல் புறக்கணிக்கும் 50 வயதிற்கு மேற்பட்ட அரசு ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வு அளிக்க உத்தரப் பிரதேச அரசு முடிவு செய்துள்ளது.
- அரசு குறிப்பிட்டுள்ள தேதியில் 50 வயதைக் கடந்த அரசு ஊழியர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று உத்தரப் பிரதேச அரசு உத்தரவிட்டுள்ளது.
- இந்தச் செயல்முறையின் நோக்கம் ஊழல் செய்யும் ஊழியர்கள் மற்றும் வேலையை சரிவர செய்யாத ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வு அளிக்கப்படுவதாகும்.
- அரசுக்கு எந்த அறிக்கையையும் சமர்ப்பிக்காமல் எந்தவொரு அரசு ஊழியருக்கும் ‘கட்டாய ஓய்வு’ அளிக்கப்படமாட்டாது என்று அரசு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - - -